# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR

**DEPOSITION OF WITNESS**

**P.W.3**

**MCOP No. 109/2012**

| | |
|---|---|
| **Name** | : கார்த்திகேயன் |
| **Father's Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : மருத்துவ ஆவண அலுவலர், அரசு மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை, சேலம். |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 05.03.2026.**

**ம.சா.3 முதல் விசாரணை:-**

1) நான் இம்மனுவின் மூன்றாம் தரப்பினர் ஆவேன். முதல்வர் அரசு மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சேலம். அவர்கள் சார்பாக சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் பெற்றுள்ளேன். அது ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் அந்த அலுவலகத்தில் மருத்துவ ஆவண அலுவலராக பணி செய்கிறேன். அழைப்பாணையில் கண்டுள்ள 29.06.2012 முதல் 17.07.2012 வரையிலான சின்னசாமி த.பெ.காளிமுத்து பைத்தூர் கிராமம் ஆத்தூர் என்பவர் கேஸ் எண்.6767/2012 அளிக்கப்பட்ட அலுலவக சிகிச்சை பற்றிய ஆவணங்கள் 21.06.2024 தேதியிட்ட ந.க.எண்.604/கி11/2024 படி அரசாணை கடிதம் 58841/இ1/2005-5 தேதியிட்ட 02.02.2001 படி சேலம் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டு அழிக்கப்பட்டது.

2) மேற்படி மருத்துவ ஆவணங்கள் 6 ஆண்டுகளுக்கு மேல் வைத்துக்கொள்வதில்லை என்பதால் அவை கழித்து அழிக்கப்பட்டது. அதற்கான உத்தரவு ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அரசாணை கடிதம் ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சின்னசாமி மருத்துவமனையில்

சிகிச்சை எடுத்துகொண்டதற்கான மருத்துவ சட்டம் சார்ந்த பதிவேட்டின் படி சின்னசாமி 29.06.2012ல் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதற்கான அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் நகல் ஆவணம் என்பதால் அதற்குரிய சான்றொப்பம் இல்லை என்றும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை உடன் குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபணை தீர்ப்பின் போது விவாதிக்கப்படும்.

**<u>குறுக்கு விசாரணை:-</u>**

3) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மருத்துவ அலுவலருடைய கையெழுத்தோ அவருடைய முத்திரையோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. டீனுக்காக என்று தான் கையெழுத்து போட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் ஒப்படைத்துள்ள ம.சா.ஆ.10 மற்றும் 11, 12 ஆகிய 3 ஆவணங்களிலும் மருத்துவ அலுவலருடைய கையெழுத்தோ அவருடைய முத்திரையோ இல்லை என்று சொன்னால் சரிதான். அவருக்கு அடுத்த அலுவலரோ உண்மை நகல் என்று சான்றொப்பம் இடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்களும் நகல் ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.12 சின்னசாமியின் தகப்பனார் பெயர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.12-ல் உள்ள சின்னசாமிக்கும் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட சின்னசாமிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவருடைய மருத்துவ குறிப்பு எண் சரியாக உள்ளது. நான் சொல்வது போல மேற்படி சின்னசாமிக்கு எங்கள் மருத்துவமனையில் எவ்வித அறுவை சிகிச்சையும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S
Digitally signed by GANESAN S
Date: 2026.03.05 17:22:52 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**